MINISTRY OF MANPOWER



# கொவிட்-19 தடுப்பூசி குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்களுக்குக் கிடைக்கிறது

## நான் ஏன் கொவிட்-19 தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்?

தடுப்பூசி:

- ✓ தொற்றைக் கணிசமாகக் குறைத்து அதன் பரவலை குறைந்தபட்சமாக்குகிறது
- ✓ தொற்று ஏற்பட்டிருந்தால் நோய் கடுமையாவதைத் தடுக்க உதவுகிறது
- ✓ பல செயற்பாடுகளை மீண்டும் தொடங்க ஏதுவாகிறது

> *“நம்மில் பலர் தடுப்பூசி போட்டுக்கொள்வதால் வைரஸ் பரவுவது கடினமாகி விடும்.”*

## நான் தடுப்பூசி போட்டுக் கொள்ள முடியுமா?

> *“கொவிட்–19 தடுப்பூசி பற்றி உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் உங்கள் மருத்துவரிடம் கேளுங்கள்.”*

கொவிட்-19 தடுப்பூசி இவர்களுக்குப் பொருத்தமானது:

- ☐ நாட்பட்ட நோய் நிலைகள் (எ.கா. உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, உயரளவு கொழுப்பு, இருதய நோய்கள்)
- ☐ மருந்துகளுக்கும், உணவு அல்லது பூச்சிக் கடிகளுக்கும் ஒவ்வாமை உடையவர்கள்
- ☐ எக்ஸீமா அல்லது ஆஸ்த்மா உள்ளவர்கள்

## நான் எவ்வாறு கொவிட்-19 தடுப்பூசிக்கு பதிவு செய்துகொள்வது?

1. *vaccine.gov.sg* தளத்தில் இணைய வழிப் படிவத்தை சமர்ப்பிக்கவும்.




2. உங்கள் சந்திப்பு ஏற்பாட்டை பதிவுசெய்ய ஒரு தனிப்பயன் இணைப்புடன் SMS-ஐ நீங்கள் பெறுவீர்கள்.



3. தடுப்பூசி போடும் நாளில் அரைக்கை அல்லது தளர்வான ஆடைகள் அணிந்து கொள்ளவும். உங்கள் பணி அனுமதியைக் கொண்டு வரவும்.




4. இரண்டாம் தடுப்பூசிக்கும் அதே தடுப்பூசி நிலையத்துக்குத் திரும்பவும்



5. நீங்கள் நோய்ப்பட்டால் தயவுசெய்து உங்கள் சந்திப்பின் நேரத்தை மாற்றிக்கொள்ளவும்.

> *“தடுப்பூசி பாதுகாப்பானதும் பலனளிப்பதும் ஆகும். உங்களுக்கு வழங்கப்படும்போது போட்டுக் கொள்ளுங்கள்.”*

**தடுப்பூசி போட்ட பின்பும் உடல்நலக் குறைவு ஏற்பட்டால் அல்லது மிதமான அறிகுறிகளிருந்தால் விரைந்து மருத்துவரைச் சந்திக்கவும்.**

**கூடுதல் தகவல்களை *vaccine.gov.sg* –இல் காணவும் அல்லது 1800-333-9999 எண்ணில் அழைக்கவும்**